கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
**Ministry of Education, Cultural Affair, Sports & Youth Affairs**
வடக்கு மாகாண சபை උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எனது இல.<br>මගේ අංකය<br>My No. | NP/3/3/FA/Cir, | உமது இல<br>ඔබේ අංකය<br>Your No | | திகதி<br>දිනය<br>Date. | 02.07.2015 |

மாகாண கல்வி அமைச்சு சுற்றுநிருபம் 8/2015.

மாகாண கல்விப் பணிப்பாளர்,
மாகாண கல்வித் திணைக்களம்,

சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

## பாடசாலைத் தவணைப்பரீட்சை ஒழுங்கமைப்பு.

பாடசாலைகளின் தவணைப்பரீட்சை தொடர்பாக பல்வேறு சுற்றறிக்கைகள் வெளியாகி இருப்பினும் இதற்கான ஒழுங்கமைப்பில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதை அவதானிக்கமுடிகிறது. எனவே பரீட்சை தொடர்பாக பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

01. ஒவ்வொரு வலயத்திற்கெனவும் பரீட்சைச்சபை ஒன்று அமைக்கப்படவேண்டும். பரீட்சைச் சபை வலயக்கல்விப்பணிப்பாளரைத் தலைவராகக் கொண்ட 13 உறுப்பினர்கள் உள்ளடங்கிய சபையாக இருக்கும். இதில் கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப்பணிப்பாளர் - அபிவிருத்தி, பிரதிக்கல்விப்பணிப்பாளர் - முகாமைத்துவம், கணக்காளர், ஒவ்வொரு 1AB, 1C, வகை 11, வகை 111 ஆகிய பாடசாலை அதிபர்கள் ஆகியோருடன் வலயக்கல்விப்பணிப்பாளரால் நியமிக்கப்படும் குறித்த வலயத்தின் கல்விசார் அலுவலர்களையும் உள்ளடங்கியதாக இருக்கும். செயலாளர் ஒருவர் இக்குழுவில் இருந்து நியமிக்கப்படல் வேண்டும்.

02. இக்குழுவே பரீட்சை தொடர்பான வினாத்தாள் தயாரிப்பு, விநியோகம், விடைத்தாள் திருத்தல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கூடி தீர்மானங்கள் எடுத்து நடைமுறைப்படுத்தும்.

03. பரீட்சைச் சபைக்கு அரச வங்கியில் நடைமுறைக் கணக்கு ஒன்று பேணப்படவேண்டும். பாடசாலை மாணவர்களிடம் இருந்து அறவிடப்படும் கட்டணங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு இக்கணக்கில் வைப்பிலிடவேண்டும். வேறு வகையான கணக்குகள் எவையும் கோட்டக்கல்வி அலுவலகங்களிலோ, பாடசாலைகளிலோ பரீட்சைக்கென நடைமுறைப்படுத்த முடியாது. அவ்வாறான கணக்குகள் தற்போது இருப்பின் அக் கணக்குகள் யாவும் உடனடியாக மூடப்பட்டு மீதிகள் மேற்படி வலய பரீட்சைச்சபைக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

04. இக்குழுவே பரீட்சை தொடர்பான வினாத்தாள் தயாரிப்பு விநியோகம், விடைத்தாள் திருத்தல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கூடி தீர்மானங்கள் எடுத்து நடைமுறைப்படுத்தும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செயலாளர்<br>ලේකම්<br>Secretary | 021-2219259 | அலுவலகம்<br>කාර්යාලය<br>Office | 021-2054095 (Acct)<br>021-3202568 (DSW)<br>021-3202281 (Plan) | தொலை நகலி<br>ෆැක්ස්<br>Fax | 021-2220794 (Gen)<br>0212054095 (Acct) |

05. இவ் அமைச்சின் **NP/3/7/Circulars-15** இலக்க 24.06.2015 திகதிய சுற்றுநிருபத்தின் 06ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கட்டண விபரம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது, இக்கட்டணம் பின்வருமாறு அமையும்.

பரீட்சைக்கட்டணமாக ஒரு தவணைக்கு அறவிடக்கூடிய உச்ச தொகை பின்வருமாறு.

| வகுப்பு | கட்டணம் ரூபாவில். |
|---|---|
| 1-2 | 20 |
| 3,4 | 30 |
| 5 | 40 |
| 6,7,8,9 | 60 |
| 10,11 | 80 |
| 12,13 | 150 |

இதற்கு மேலதிகமாக எந்தவிதக் கட்டணங்களும் மாணவர்களிடமிருந்து அறவிட முடியாது.

06. வசதி குறைந்த மாணவர்களிடம் பரீட்சை கட்டணத்தை வற்புறுத்தி வசூலிக்க முடியாது. அவ்வாறான மாணவர்களுக்கு இலவசமாக பரீட்சைகள் நடாத்தப்படவேண்டும்.

07. பரீட்சைச் சபை வங்கிக்கணக்கினது காசோலைகளில் வலயக்கல்விப்பணிப்பாளர், வலய கணக்காளர் ஆகியோர் கையொப்பமிடப்படுவதுடன் உறுதிச்சீட்டுகள், காசேடு ஏனைய கொடுக்கல் வாங்கல் ஆவணங்கள் என்பவை வலயக் கணக்குக் கிளையினால் பேணப்படவேண்டும்.

08. அச்சடித்தல் வேலைகள் பெறுகை நடைமுறைகளுக்கமைய மேற்கொள்ளப்படவேண்டும்.

09. பரீட்சை வினாத்தாள் தயாரிப்பு, அச்சடித்தல் என்பவற்றுக்குத் தேவையான தரம் மற்றும் இரகசியத்தன்மை கண்டிப்பாக பேணப்படவேண்டும்.

10. மாதாந்தம் காசேடு மற்றும் தொடர்புடைய ஏடுகள் சமப்படுத்தப்பட்டு வங்கிக்கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.

11. 4 மாதங்களுக்கு ஒருமுறை பரீட்சைச் சபையின் வரவு செலவு அறிக்கை தயாரிக்கப்பட்டு மாகாணகல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைப்பதுடன் பிரதி கல்வியமைச்சிற்கு அனுப்பப்படல் வேண்டும்.

இ.இரவீந்திரன்,
செயலாளர்.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

பிரதி:

01. பிரதம செயலாளர், வடமாகாணம்.
02. பணிப்பாளர், கணக்காய்வுத் திணைக்களம், வடமாகாணம்.
03. உதவிக்கணக்காய்வாளர் நாயகம், யாழ்ப்பாணம்